# கல்வியில் இடைநிறுத்தம் தடுத்திடுவோம்!

முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டிற்காக சமூக நீதி அறக்கட்டளை உட்பட பல்வேறு சமூக அமைப்புகள், ஜமாத்கள், தனி நபர்கள் என்று சமூகத்தின் மீது அக்கறை உள்ள மக்கள் களம் இறங்கி கடுமையாக உழைத்து வருகின்றனர். இதன் காரணமாக படிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் பெருகி வருகிறது. குறிப்பாக பெண்களிடம் நல்ல மாற்றம் தெரிகிறது. குறைந்த அளவிற்கான பணிகள் நடைபெற்று வருகின்ற போதே இந்த அளவு ஆர்வம் காட்டும் மக்களிடையே முறையான விழிப்புணர்வுப் பிரச்சாரம் நடைபெறுமேயானால் இன்ஷா அல்லாஹ் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

எந்த ஒரு சமூக முன்னேற்றத்தின் முயற்சிகளும் தொடர்ச்சியாக நடைபெற்றால் மட்டுமே மாற்றம் ஏற்படும்.

இந்த ஆண்டு பள்ளி இறுதித்தேர்வு முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் உடனடியாக முஸ்லிம் சமுதாயம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவ மாணவிகளும் முழுமையாக கல்லூரிகளில் சேருவதை ஜமாத்கள் மற்றும் சமூக அமைப்புகள் கட்டாயம் கண்காணிக்க வேண்டும். தேர்வில் தோல்வி அடைந்தவர்களை உடனடியாக நடைபெற உள்ள மறு தேர்விற்கு ஆர்வப்படுத்திட வேண்டும். இதை உடனடியாக முஸ்லிம் சமுதாயம் இன்றே களத்தில் இறங்கி செய்திட வேண்டும்.

மாணவர்கள் இந்தப் பருவத்தில்தான் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்துகின்றனர். இடைநிறுத்தம் செய்வதை தடுத்தால்தான் முஸ்லிம் சமுதாயம் கல்வியில் முன்னேறும்.

பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தும் சமூகத்தில் நம் நாட்டிலேயே முஸ்லிம்கள்தான் அதிகம் என்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களே கூறியுள்ளார். ஒரு சமூகம் முன்னேற உயர்கல்விதான் ஆணிவேர். அதிலும் உயர்தரமான உயர்கல்வியைப் பெற வேண்டும். பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்துவது இறைவனுக்கும் நம் சமூகத்திற்கும் செய்யும் துரோகம் ஆகும். அடுத்த தலைமுறை அறிவாற்றலைப் பெறுகின்ற நேரத்தில் அதை பாதியில் தடுத்துநிறுத்திட பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் கூட உரிமை இல்லை.

ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி என்பது கட்டயா கடமை என்பதை இஸ்லாமிய மார்க்கம் மிகத்தெளிவாக வலியுறுத்துவதை மனத்தில் நிறுத்த வேண்டும். மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டுமே இந்த தடங்கலில் இருந்து இஸ்லாமிய சமுதாயம் மீட்சி பெறும்.

இடைநிறுத்தம் தடுத்திட....

உயர்கல்வியைப் பெற்றிட....

மக்களிடையே பிரச்சாரம் செய்திடுவோம்!

**CMN சலீம்**

**1/5/2009**